# வேங்கைவாசல் முதல்நிலை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## சென்னை - 600 126.

## முன்னிலை : V. ஜெயச்சந்திரன்

க.ஊ.எண் : 30/2025

நாள் : 29/07/2025

மு.மு.எண் : 217/2025

பொருள் : கட்டிட/மனை உட்பிரிவு வரைப்பட அனுமதி வேங்கைவாசல் ஊராட்சி சென்னை-73 கிராம் நகர் பொன்னியம்மன் கோவில் தெரு/சாலை, புல எண் 217/10A, 217/3B1A, 217/3B1B, 217/3B2A, 217/3B1, & 217/9B ஆகியவற்றில் மனைஎண் — கட்டிடம் / மனை உட்பிரிவு / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை : அரசு ஆணை எண். 255 நாள் 19.08.97 திரு/திருமதி H. மனோஜ் கிருஷ்ணன் அவர்களின் மனுநாள் 29.7.2025

## உத்திரவு :-

திரு/திருமதி H. மனோஜ் கிருஷ்ணன் என்பவருக்கு வேங்கைவாசல் ஊராட்சி கிராம் நகர் பொன்னியம்மன் கோவில் தெரு புல எண் 217/10A, 217/3B1A, 217/3B1B, 217/3B2A, 217/3B1 & 217/9B மனை எண் — வேங்கைவாசல் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கட்டிடம் / சுற்றுசுவர் / கிணறு / கழிப்பிடம் / குளியலறை / கடைகள் / முதல் தளம் / இரண்டாம் தளம் / பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் / மனை உட்பிரிவு ஆகியவகைகள் கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது — ம் தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும் அனுமதி கட்டணம் ரூ. 199748 (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்தெட்டு மட்டும்) செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீது எண் 2025-26/3/B/254/134 நாள் 29.7.25 மற்றும் மழைநீர் சேகரிப்பு டெபாசிட் ரூ. — (ரூபாய் — மட்டும்) அங்கீகரிக்கப்பட்ட வரை படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

DD no 507961
Date 29.7.25

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் வலது பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும், இடது பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 3.00 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரை படங்களை காண்பிக்க வசதியான வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்காவிட்டால் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதெனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற் பிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவே அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடி புக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறபடுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர், செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிருந்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

V. Jayachandran 29/07/2025

**தலைவர் / நிர்வாக அதிகாரி**
**வேங்கைவாசல் முதல்நிலை ஊராட்சி,**
**சென்னை - 600 126.**

29/07/2025

பெறுநர்

திரு/திருமதி H. பெனாசீர் பேகம்,
M4M 8C Flat 394,
பகெல் இடியக் நெகை,
இராஜ நகர், திருவொற்றியூர்,
சென்னை - 44.